அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடித இல: 05

எனது இல: தா/9/2/1/136
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2008.07.28

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
கூட்டுத் தாபனத் தலைவர்கள்,
நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள்.

## முதியோர் அடையாள அட்டைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்

சனத்தொகை வளர்ச்சி வீதமானது துரிதமாக வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றதும் மொத்த சனத்தொகையில் 10% மான முதியோர்களைக் கொண்டதுமான தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கையானது நாடொன்றாக உள்ளது.

02. முதியோர்களுடைய பல்வேறு சேவைக் கோரிக்கைகளை வழங்குவதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் குறிக்கோள்களுடன் 1990 இல் இருந்து பிரதேச செயலகங்களின் ஊடாக முதியோர் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு சமூக சேவைகள் நலன்புரி அமைச்சினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

03. 60 வயதுக்கு மேற்பட்ட இத்தகைய முதியோர்களுக்கு சேவைகளை வழங்கும் பொழுது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

I. நிறுவனங்களினால் சேவைகளை வழங்கும் பொழுது முதியோர் அடையாள அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளித்தல்.
II. முதியவர்கள் சுலபமான சேவைகளைப் பெறுவதற்கு அலுவலகங்களை ஒழுங்குபடுத்தல்.
(உதாரணம்: கீழ்த்தளங்களில் அலுவலகங்களின் ஓய்வூதியக் கிளைகளினை அமைத்தல்)

ஒப்பம்/ டி.திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பிரதி: செயலாளர்
சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சு: } தகவலுக்காக